# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2053 • மார்ச் 5, 2022

Weekly E-paper • March 5, 2022





## வெள்ளைப் பூக்கள் மலர்கவே!

உதயகுமார்

## நீட் ரத்து தொலைவில் இல்லை

தலையங்கம்

## அறநிலையத் துறையின் கீழ் சிதம்பரம் கோயில்!

மதிவாணன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● மார்ச் 5, 2022 Weekly E-paper ● March 5, 2022


# பெற்ற வெற்றியும் கற்ற பாடமும்!

**சுப. வீரபாண்டியன்**



*2019 நாடாளுமன்றத் தேர்தல், 2021 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் ஆகியனவற்றைத் தொடர்ந்து இப்போது 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களிலும், திமுக தலைமையிலான கூட்டணி மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. இதனை ஆங்கிலத்தில் 'ஹாட்ரிக்' என்று சொல்வார்கள்!*

*உள்ளாட்சித் தேர்தல்களில் திமுக பெற்றுள்ள வெற்றியை விட, இத்தேர்தல்களில் சமூக நீதி பெற்றுள்ள வெற்றியே நாம் மிகவும் கொண்டாடத்தக்கது. 1996 உள்ளாட்சித் தேர்தலில், தலைவர் கலைஞர் முதல்வராக இருந்தபோது, பெண்களுக்கு 33% இடங்கள் ஒதுக்கப்பட்டன. இப்போது அதனையும் தாண்டி 50% இடங்களில் பெண்கள் வெற்றிபெற்றுள்ளனர்.*



சென்னை மேயர் பிரியா ராஜன்

*தமிழ்நாட்டின் 21 மாநகராட்சிகளில், 11 மாநகராட்சிகளில் பெண்களே மேயர்களாகப் பதவி ஏற்றுள்ளனர் என்பது திராவிட மாடலின் இன்னொரு சாதனை என்றே கூற வேண்டும். அதிலும், தலைநகரமான சென்னையில், பட்டியலினத்தைச் சேர்ந்த ஓர் இளம்பெண் மேயராக ஆகியுள்ளார் என்பது வரலாற்றுச் சிறப்புடையது என்றே கூறலாம்.*

*இப்படி நாம் கட்சியின் வெற்றியையும், சமூக நீதியின் வெற்றியையும் கொண்டாடிக் கொண்டிருக்கும் நேரத்தில், பாஜகவும் தாங்கள் பெரு வெற்றி பெற்றுவிட்டதாகக் கூறிக் கொள்கிறது. பரிதாபத்திற்குரிய அந்த வெற்றி குறித்து நாம் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.*

*தாங்கள் 308 இடங்களில் வெற்றி பெற்றுவிட்டதாகவும், 11 மாநகராட்சிகளில் காலூன்றி விட்டதாகவும் அவர்கள் பெருமை பேசிக் கொள்கின்றனர். ஏதோ 400 இடங்களில் அவர்கள் 308 இடங்களில் வெற்றி பெற்றுவிட்டதைப் போல அவர்கள் பேசுகின்றனர். மொத்தமுள்ள 12830 இடங்களில் 308 இடங்களில் வெற்றி பெற்றதைப் பாஜகவைத் தவிர, உலகில் எவரும் கொண்டாட மாட்டார்கள்! அந்த 308 இடங்களில் 200 இடங்கள் குமரி மாவட்டத்தில் மட்டும் கிடைத்த வெற்றி.*

*ஆனால் நாங்கள் மொத்தமுள்ள எல்லா இடங்களிலும் போட்டியிடவில்லை. ஏறத்தாழ 5400 இடங்களில் மட்டும்தான் போட்டியிட்டோம். மொத்த இடங்களிலும் போட்டியிட்டிருந்தால் இன்னும் கூடுதல் வெற்றியைப் பெற்றிருப்போம் என்கின்றனர். அவர்களை எல்லா இடங்களிலும் போட்டியிடக் கூடாது என்று யார் தடுத்தார்கள்? எல்லா இடங்களிலும் போட்டியிடுவதற்கே ஆள் இல்லாத கட்சிக்கு இவ்வளவு பெருமை கூடாதல்லவா!*

*தங்களின் கோட்டை என்று அவர்கள் கூறிக்கொண்ட கொங்கு மண்டலத்தில் ஓர் இடத்தில் கூட அவர்களால் வெற்றி பெற முடியவில்லை என்பது இன்னொரு அவலம்!*

*இருப்பினும் நாம் கவனமாக இருக்க வேண்டிய இடம் ஒன்று இருக்கிறது. அந்த இடம் குமரி மாவட்டம். எப்போதும் குமரி மாவட்டம், தமிழ்நாடு அரசியலிலிருந்து சற்று விலகியே நின்றுள்ளது என்பதை நாம் அறிவோம். அதனை அவர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர்.*

*கொங்கு மண்டலத்தில் கவனம் செலுத்தியதைப் போல, அடுத்து குமரி மாவட்டத்திலும் நாம் பணியாற்ற வேண்டியுள்ளது என்பதுதான் இந்தத் தேர்தல் நமக்கு கற்றுக் கொடுத்துள்ள பாடம்!*

●



**கொங்கு மண்டலத்தில் பொதுச் செயலாளர் சுபவீ சுற்றுப் பயணம்**



**மார்ச் 11- கோவை, சூலூர்**

**மார்ச் 12 - பொள்ளாச்சி**

**மார்ச் 13 - கோவை மற்றும் கிணத்துக்கடவு**

பொள்ளாச்சி மா. உமாபதி, சிற்பி செல்வராஜ்,

மகாலட்சுமி, காசு.நாகராசு

ஆகிய தோழர்கள் இச்சுற்றுப் பயணத்தில்

பங்கு பெறுகின்றனர்

# வெள்ளைப் பூக்கள் மலர்கவே!

உதயகுமார்

2021 அக்டோபர் மாதத்திலிருந்து உக்ரைனின் எல்லைப்பகுதிகளில் ரஷ்யா தனது படைகளைக் குவித்து வந்தது. செயற்கைக்கோள் மூலமாகவும், சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் இந்தச் செய்திகள் உலகுக்குக் கிடைத்தன. அப்போதிருந்து எதிர்பார்க்கப்பட்ட ரஷ்யாவின் போர் தாக்குதல், பிப்ரவரி 24 2022 அன்று தொடங்கியது.

ஆனால் ரஷ்ய அதிபர் புடின் இதனைப் போர் என்றோ படையெடுப்பு என்றோ குறிப்பிடவில்லை. *'a special military operation'* அதாவது ஒரு சிறப்பு இராணுவ நடவடிக்கை என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டு மக்களின் மீதான தாக்குதல் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள் ரஷ்யா மீது பொருளாதாரத் தடையை விதித்துள்ளன. உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் உலகம் முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. 2014ஆம் ஆண்டு, ரஷ்யா உக்ரைனின் கிரிமியா என்னும் பகுதியைக் கைப்பற்றியதிலிருந்து, எப்போது வேண்டுமானாலும் இப்படிப்பட்ட ஒரு போர் நடக்கலாம் என்கிற நிலை நீடித்து வந்தது.

1991இல் சோவியத் யூனியன் உடைந்தபோது உக்ரைன் தனிநாடாக விடுதலை பெற்றது. உக்ரைன் ஐரோப்பாவில் ரஷ்யாவிற்கு அடுத்த பெரிய நாடாகும். அன்றிலிருந்து உக்ரைனை நேட்டோ(NATO) எனப்படும் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட 30 நாடுகளின் வட அத்திலாந்திய ஒப்பந்த அமைப்பும், ரஷ்யாவும் தொடர்ந்து தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயற்சிகள் எடுத்து வருகின்றன.



உக்ரைனை ரஷ்யாவின் ஒரு பகுதியாகவே அதனுடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ள ரஷ்யா தொடர்ந்து முயற்சிகளை எடுத்து வருகிறது. இதனை உக்ரைன் நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. யார் ஒருவரும் இன்னொரு நாட்டினர் தங்களுடைய இன மொழி அடையாளத்தை நசுக்கும்போது அதனை அனுமதிக்க மாட்டார்கள்.

உக்ரைன் ரஷ்யாவின் எதிரிகளால் உருவாக்கப்பட்ட ஒரு செயற்கையான நாடு என்றும், உக்ரைன் மேற்குலகின் கைப்பாவையாகச் செயல்பட்டு வருகிறது என்றும், அது ஒரு தனி நாடு இல்லை என்றும் ரஷ்ய அதிபர் புடின் கருத்துகளைத் தொடர்ந்து முன்வைத்தார்.

ரஷ்யாவிற்கு ஆதரவாகச் செயல்பட்டு, அய்ரோப்பிய ஒன்றியத்துடன் பொருளாதார ஒன்றிணைதலை நிராகரித்த அன்றைய உக்ரைன் அதிபர் விக்டர் யனுகோவிச்சை எதிர்த்து 2013ஆம் ஆண்டு உக்ரைனில் பெரிய அளவில் போராட்டம் எழுந்தது. அதனைத் தொடர்ந்து விக்டர் யனுகோவிச் உக்ரைனிலிருந்து தப்பி ரஷ்யாவிற்குச் சென்றார். பின்னர் ரஷ்யா கிரிமியாவை வாக்கெடுப்பு மூலம் கைப்பற்றியது.

அமெரிக்கா ஆதிக்கம் செலுத்தும் வட அத்திலாந்திய ஒப்பந்த அமைப்பில் உக்ரைன் இணைந்துவிட்டால், ரஷ்யாவின் எல்லைகளுக்கு அமெரிக்காவால் அச்சுறுத்தல் ஏற்படும் என்பதாலும், அய்ரோப்பாவில் ரஷ்யாவின் செல்வாக்குப் பின்னுக்குத் தள்ளப்படும் என்பதாலும், உக்ரைன் NATOவுடனோ, அய்ரோப்பிய ஒன்றியத்துடனோ இணைந்துவிடுவதை ரஷ்யா விரும்பவில்லை. ஆனால் உக்ரைன் அதிபர் வொலொடிமர் ஜெலென்ஸ்கியோ அமெரிக்க அதிபர் ஜோ பைடனுடன் NATOவில் உக்ரைன் இணையும் வகையில் செயல்பட்டார்.

இப்போது ரஷ்யா தாக்குதலைத் தொடங்கியிருக்கிறது. இரு தரப்பிற்கும் ஆதரவாக நாடுகள் அணி சேருகின்றன.

அமெரிக்காவின் ஆதிக்கத்திற்கும் ரஷ்யாவின் ஆதிக்கத்திற்கும் இடையில் பந்தாடப்பட்டது உக்ரைன். உக்ரைனின் உரிமைப் பிரச்சினைகளை ரஷ்யா சீண்டிப் பார்த்தது என்றால், அமெரிக்கா உக்ரைனைப் பகடைக்காயாய்ப் பயன்படுத்தி ரஷ்யாவைத் தூண்டிப் பார்த்தது.

இப்போது இந்த நாடுகளின் ஆளும் வர்க்கத்தினரும், பொருளாதாரத்தைக் கட்டுக்குள் வைத்திருக்கும் முதலாளித்துவ வர்க்கத்தினரும், ஒன்றும் அறியாத பொது மக்களின் வாழ்க்கையைக் கேள்விக்குறி ஆக்கியுள்ளனர். அதிகார வேட்கை கொண்ட நாடுகளால் மக்கள் அகதிகளாக்கப்பட்டிருக்கின்றனர்.

இன்று உலக நாடுகள் ஒவ்வொன்றும் சங்கிலித் தொடராய்ப் பிணைக்கப்பட்டிருக்கும் நிலையில், இரு நாடுகளுக்கிடையேயான போர் என்பது, அனைத்து நாடுகளிலும் எதிரொலிக்கும். கொரோனா என்னும் நோய்த் தொற்றால் பல கோடி மனித உயிர்களை இழந்து, பல கோடி மக்கள் வாழ்வாதாரத்தை இழந்து, மனித இனம் மீண்டு முன்னேறி வரும் வேளையில், அதிகாரப் பசிக்கு மீண்டும் உயிர்களையும், உடைமைகளையும் இழந்து மனித குலம் குமுற வேண்டுமா?

அய்க்கிய நாடுகள் அவையில், ரஷ்யா உடனடியாகவும், முழுமையாகவும், நிபந்தனையற்றும் உக்ரைன் மீதான தாக்குதலை நிறுத்த வேண்டும் என்றும், அனைத்துப் படைகளையும் திரும்பப் பெற வேண்டும் என்றும், ரஷ்யாவிற்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இது நல்ல விளைவுகளை ஏற்படுத்த வேண்டும்.

போரின் கொடுமைகளை நேரில் கண்டவர்கள் எவரும் மீண்டும் போருக்கான சூழல் உருவாகுவதைக் கற்பனைகூட செய்து பார்க்கமாட்டார்கள். இந்தச் சூழல் பல நாடுகளுக்கு இடையேயான போராக மாறிவிடாமல், பதற்றம் தணிய வேண்டும், பக்குவம் அடைய வேண்டும், அமைதி நிலைக்க வேண்டும் என்பதே எல்லோருடைய எண்ணமும் ஏக்கமும் ஆகும்.

எல்லைகளை விரிவாக்க உயிர்வாங்கும் மனிதர்களே, உங்கள் மனதில் வெள்ளைப் பூக்கள் மலரட்டும்! ●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## நீட் ரத்து தொலைவில் இல்லை

இரண்டு நாடுகளுக்கிடையே போர் என்றால், அது அவ்விரு நாடுகளின் பிரச்சனை என்றுதான் குரல்கள் எழும்.

அண்மையில் மூண்ட ரஷ்ய - உக்ரைன் போரினால், நீட்நுழைவுத் தேர்வுக்கு எதிரான குரல்கள் இங்கே ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது.

உக்ரைன் போன்ற சிறிய நாடுகளுக்கு ஏன் மருத்துவக் கல்வி படிக்க இங்குள்ள மாணவர்கள் போனார்கள்? என்று பா.ஜ.க வின் அமைச்சர்கள் பேசுகிறார்கள்.

இது பரப்புரை செய்யவோ, விளம்பரப்படுத்திக் கொள்ளவோ உகந்த நேரம் இல்லை. முதலில் அங்குள்ள மாணவர்களைக் காப்பாற்றுங்கள் என்று செவியில் அடித்தாற்போல சொல்லியிருக்கிறார் நம் முதல்வர் மு.க.ஸ்டாலின், ஒன்றிய அரசுக்கு.

கர்நாடகாவைச் சேர்ந்த மாணவன் நவீன், 'பிளஸ் டூ' தேர்வில் 97% மதிப்பெண்கள் பெற்றும் இங்கே மருத்துவப் படிப்பில் சேர முடியாமல் உக்ரைனுக்குச் சென்றுள்ளார். மருத்துவக் கல்லூரியில் நான்காம் ஆண்டு மாணவரான அவர் உக்ரைன் போரில் கொல்லப்பட்டுள்ளார். இங்கு அவரது மருத்துவப் படிப்பிற்குத் தடையாய் இருந்தது நீட் நுழைவுத் தேர்வு.

ஏழை, நடுத்தர, கிராமப்புற மாணவர்களால் எதிர்கொள்ள முடியாத அளவுக்கு நீட் தேர்வு இருக்கிறது.

தனியார் கல்லூரிகள் 70 லட்சம் வரை கட்டணம் என்ற பெயரிலும், பிற வகையிலும் கொள்ளை அடிக்கிறார்கள், நீட் தேர்வை வைத்து.

அதனால் உக்ரைன், சீனா போன்ற நாடுகளுக்கு 20 அல்லது 30 லட்சம் செலவில் மருத்துவப் படிப்பிற்காகச் சென்று விடுகிறார்கள் மாணவர்கள். அவர்களின் பெற்றோர் வீடு, நிலங்களை விற்றும், கடன் வாங்கியும் தம் பிள்ளைகளை அனுப்பி வைக்கிறார்கள் என்பது இன்னொரு வேதனை.

நீட் நுழைவுத் தேர்வு வராமல் இருந்திருந்தால் மாணவர்கள் ஏன் படிக்க வெளிநாடு செல்ல வேண்டும்.

"உள்நாட்டில் மருத்துவக் கல்வி கற்கத் தடையாக இருக்கும் நீட் தேர்வை ரத்து செய்யும் நம் இலக்கு வெகு தூரத்தில் இல்லை... இது ஒட்டுமொத்த இந்தியாவின் குரலாக மாறும்" என்கிறார் தமிழ்நாட்டின் முதல்வர்.

அவரை அடியொற்றி பா.ஜ.க ஆளும் கர்நாடகத்தில் ஒலிக்கத் தொடங்கி விட்டது, அம்மாநில முன்னாள் முதல்வர் குமாரசாமியின் குரல் !

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408

## சென்னை மண்டலக் கலந்தாய்வுக் கூட்டம்



திராவிட இயக்கத் தமிழர் பேரவை சென்னை மண்டலக் கலந்தாய்வுக் கூட்டம் 26-02-2022 அன்று சென்னைப் பேரவைத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. துணைப் பொதுச்செயலாளர் ஆ.சிங்கராயர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் துணைப் பொதுச்செயலாளர் சிற்பி.செல்வராஜ், அவைத் துணைத் தலைவர் பொள்ளாச்சி மா. உமாபதி, பொருளாளர் எழில்.இளங்கோவன், முதன்மைச் செயலாளர் புலேந்திரன், அமைப்புச் செயலாளர் கா.சு.நாகராசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.மாறன், தலைமை நிலையச் செயலாளர் எட்வின், கல்வி உதவித் திட்டக் குழு இயக்குநர் லாரன்ஸ், சென்னை மாவட்டச் செயலாளர் கார்த்திக், காஞ்சி மாவட்டச் செயலாளர் இளமாறன், மாவட்டத் துணைச் செயலாளர் தாம்பரம் இளங்கோ, திருவள்ளூர் மாவட்டச் செயலாளர் ஆ.ராஜு, உள்ளிட்ட பேரவைத் தோழர்கள் கலந்து கொண்டார்கள்.

## புதுச்சேரி மாநிலக் கலந்தாய்வுக் கூட்டம்



26-02-2022 அன்று மாலை, பேரவையின் புதுச்சேரி மாநிலத்தில் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் புதுவை மாநில அமைப்பாளர் திராவிட மங்கை, துணைப் பொதுச் செயலாளர் ஆ.சிங்கராயர், முதன்மைச் செயலாளர் புலேந்திரன், அமைப்புச் செயலாளார் கா.சு.நாகராசன் உள்ளிட்ட பேரவைத் தோழர்கள் கலந்து கொண்டார்கள்.

## ஆளுநர் அலுவலகம் முற்றுகைப் போராட்டம்



28-02-2022 அன்று, பேரவையின் தோழமை அமைப்பான திராவிடத் தமிழர் கட்சியின் சார்பாக நீட் தேர்வை ரத்து செய்தல், கல்வியை மாநிலப் பட்டியலில் இணைத்தல், மாநில உரிமைகளில் தலையிடும் ஆளுநர் பதவியை ரத்து செய்தல் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி அக்கட்சியின் தலைவர் வெண்மணி தலைமையில் நடைபெற்ற சென்னை ஆளுநர் அலுவலகம் முற்றுகைப் போராட்டத்தில், பேரவையின் துணைப் பொதுச் செயலாளர் துணைப் பொதுச் செயலாளர் ஆ.சிங்கராயர், பேரவையின் அமைப்புச் செயலாளர் கா.சு.நாகராசன், காஞ்சி மாவட்டத் துணைச் செயலாளர் தாம்பரம் இளங்கோ, தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு. மாறன் உள்ளிட்ட பேரவைத் தோழர்கள் கலந்து கொண்டார்கள்.

# அறநிலையத் துறையின் கீழ் சிதம்பரம் கோயில்!

மதிவாணன்

சிதம்பரம் நடராசர் கோயிலில் தீட்சிதர்களின் சர்ச்சையும் சர்வதிகாரப் போக்கும், இன்று நேற்றா நடைபெறுகின்றது? பெரியபுராணக் காலத்தில் இருந்தே பேசப்பட்டு வருகிறது. நந்தன் தீயில் இறங்கி ஜோதியில் கலந்தார் என்கிறது அந்தப் புராணம். கோயில் உள்ளே சென்றவர் வெளியில் வரவில்லை. இத்தனை நூற்றாண்டுகளுக்குப் பிறகு, இன்றும் நந்தன் உள்ளே சென்றதால் தீட்டுப்பட்டதாகச் சொல்லப்படும், தெற்கு நுழைவாயில் அடைக்கப்பட்டே காணப்படுவது மனித குலத்தின் அவமானச் சின்னம்.

கடந்த 2008-ஆம் ஆண்டு ஓதுவார் ஆறுமுகசாமி, சிற்றம்பலம் ஏறி தமிழில் தேவாரம் பாட முயற்சித்த போது, தீட்சிதர்கள் அடித்து உதைத்துக் கோயிலில் இருந்து வெளியே தூக்கி எறிந்தனர். அப்பொழுது கலைஞர் முதலமைச்சராக இருந்ததால், உடனே அரசாணை வெளியிட்டு சிற்றம்பலத்தில் தேவாரம் பாட அனுமதிக்கப்பட்டதுடன், உரிய மதிப்புடன் நடத்துவதையும் உறுதி செய்தார்.

இதற்கு முன்பு கோயில் நிர்வாகத்தை அரசு ஏற்பதை எதிர்த்து தீட்சிதர்கள் நீதிமன்றம் சென்றிருந்தனர். கோயில் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்த அரசுக்கு உரிமை உண்டு என்று நீதிமன்றம் 2-2-2009 அன்று தீர்ப்பளித்தது. இதனைத் தொடர்ந்து அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அன்றே கோயில் நிர்வாகத்தை அரசு ஏற்று நடத்த வழிசெய்தார். தீட்சிதர்கள் மேல் முறையீடு செய்தனர். உயர்நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது. உச்சநீதிமன்றம் சென்றனர் தீட்சிதர்கள்.

இந்நிலையில் 2011-இல் ஆட்சி மாறியது. அதிமுக அரசு உச்சநீதிமன்றத்தில் எந்த எதிர்வாதமும், விளக்கமும் அளிக்காமல் இருந்ததால் சந்தேகங்களும் கண்டங்களும் எழுந்தன. அதன் பிறகும் பேருக்குச் சில நிமிடங்கள் வாதிடப்பட்டதே ஒழிய உரிய பங்களிப்பு இல்லாததால், தீட்சிதர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்க வசதி செய்யப்பட்டது. இதனால் நாம் உரிமை இழக்க நேர்ந்தது.

இதற்குள் கவனிக்க வேண்டிய மற்றொரு தகவல் உள்ளது. அரசு கையில் எடுக்கும் முன் 2007-இல் ஆண்டு வருமானமாக கோயில் நிர்வாகம் காட்டியது ரூ. 37,000 தான். ஆனால் அரசு கையில் இருந்த பொழுது உண்மையான கணக்கு வெளிவந்தது. ஆண்டுக்கு ரூ.63,00,000 சராசரியாக வருமானம் இருப்பது தெரிய வந்துள்ளது.

இதன் பிறகு, 2019-இல் கோயில் விதிமுறைக்கு மாறாக ஒரு திருமணம் ஆயிரம் கால் மண்டபத்தில் நடத்தப்பட்ட குற்றச்சாட்டில் சர்ச்சை எழுந்தது. இம்மண்டபத்தில் அதற்கு முன்பு வள்ளலார், கிருபானந்த வாரியார் ஆகியோர் நுழைவது தடுக்கப்பட்ட வரலாறு உண்டு.



இம்மண்டபத்தின் புனிதம் கெட்டு விடும் என்பதே அந்த மறுப்புக்கான காரணம். அதே ஆண்டு மகனின் பிறந்தநாளுக்காகக் கோயிலுக்கு வந்தப் பெண், தங்களுக்கு அர்ச்சனை சரியான முறையில் செய்யக் கோரியதால், அவர் மகன் முன்னிலையில் அறையப்பட்டார்.

தற்போது ஒரு தீட்சிதர், பெண் ஒருவரைச் சிற்றம்பல மேடைக்கு அழைத்துச் செல்லும் நிகழ்வு நடந்தது. அதற்குள் அங்கு குவிந்த மற்ற தீட்ஷிதர்கள் அந்தப் பட்டியலினப் பெண்ணைச் சாதி பெயர் குறிப்பிட்டு திட்டவும் செய்துள்ளது பொது வெளியில் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது.

இதனையடுத்து அப்பெண் அளித்த புகாரின் பெயரில் 20 தீட்சிதர்கள் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்கு பதியப்பட்டுள்ளது. ஆனால் காவல் துறையினர் இதுவரையில் யாரையும் கைது செய்யவில்லை. கோயிலில் இந்தத் தொடர் குளறுபடிகளின் அடிப்படையில், கோயில் நிர்வாகத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று தலைவர்களும், மக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

தமிழர்களையும், தமிழ் மொழியையும் பாகுபாட்டுடன் நடத்தும் தீட்சிதர்கள் கட்டுப்பாட்டில் இருந்து கோயிலை விடுவிக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நீதிமன்றம் சட்ட வழியை முடிவுக்கு கொண்டு வந்துவிட்டதால், இப்பொழுது சட்டமன்றத்தில் சட்டமியற்றி கோயிலை இந்து அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வழி ஏற்பட்டுள்ளது.

தமிழ் மானம் காக்க திமுக அரசு எப்பொழுதும் முன்னின்று இருக்கின்றது. இச்சிக்கலிலும் உரிய நடவடிக்கையைத் தக்க நேரத்தில் எடுக்க வேண்டும், தமிழர்களின் இழிநிலையைப் போக்க வேண்டும். தீட்சிதர்களின் சர்வாதிகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க, சிதம்பரம் நடராசர் கோயிலைத் தமிழ்நாடு அரசு இந்து அறநிலையத் துறையின் கீழ் கொண்டு வர வேண்டும். இது மக்களின் எதிர்பார்ப்பு.

Published By Dravida Iyyakka Tamilar Peravai.   Editor Suba. Veerapandian